
# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2099
ஆவணி 11
றம்ழான் பிறை 22
ஞாயிறு (27-8-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 25

விலை சதம் 60


# தமிழின விடுதலைப் பாதையில்



தமிழர் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் அவர்கள் 26 8 78ல் தனது ஐம்பத்தோராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். தலைவர் அமிருக்கும், அவரது சேவைக்கு உறுதுணையாக கைகொடுத்து வரும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்துக்கும் சுதந்திரன் தனது இதயவாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. செப்டம்பர் 3ம் திகதி இருவரும் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணம், தமிழ் இனத்துக்கும், தமிழ்ஈழ விடுதலைக்கும் பயன்படவேண்டுமென்ற நல்லாசியையும் இப்போதே தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

(படப்பிடிப்பு ஏ.வி.எம்.)

## முன்னேறும் நாளே என் பிறந்தநாள்

"எனது பிறந்த நாளையொட்டி என்மீது அன்பு கொண்ட இளைஞர்களும்நண்பர்கள் சிலரும் 27ந் திகதி விழாக் கொணடாடுவதாக அறிகிறேன். இவ்விழாவை நிறுத்த நான் முயற்சிகள்எடுத்தும் பலிக்காத காரணத்தினால் சிறிய அளவில் இயக்கத்திற்குப் பயன்தரக்கூடிய வகையில் ஓர் கூட்டத்தை நடாத்தவும் மலரை வெளியிடுவதற்கும் ஒப்புதல் கொடுத்தேன்.

தமிழினம் நலிவுற்று நிற்கும் இந்நேரத்தில் பிறந்த நாள் விழாவினால் எனக்கு எவ்வித மகிழ்ச்சியுமில்லை. இனத்தின் சுதந்திரத்திற்கு உழைக்கும் நாளே எனக்கு மகிழ்ச்சி தரும் நாள்: விடுதலைப் பாதையில் முன்னேற்றம் காணும் நாளே என் பிறந்த நாள். என் இறப்பினால் அந்த இலட்சியம் ஈடேறுமாயின் பிறந்த நாளிலும் பார்க்க அந்த நாளை மகிழ்ச்சியோடு, மன நிறைவோடு எதிர் நோக்குவேன்.

அன்பன்,
அ. அமிர்தலிங்கம்

★

## இவனே தலைவன்

அமிர்தலிங்கன் ஆற்றல் மிக்கவன்!
தமிழர் தலைவன் ஆகி நிற்பவன்!

நேற்றும் இன்றும் நிமிர்ந்த நெஞ்சம்
நெருப்பில் நடந்து பழகிய கால்கள்
காற்றைப் புயலாய் ஆக்கும் அருந்திறன்
கடலை மோதி உருட்டும் வல்லமை
நூற்று மறவர் களின் ஓர் வடிவம்
நுவலரும் மா காவிய வீரன்
ஏற்ற மிக்க எழுச்சிக் குன்றம்
இனிய தமிழ் ஈழத்தின் இன்னுயிர்

அமிர்தலிங்கன் ஆற்றல் மிக்கவன்!
தமிழர் தலைவன் ஆகி நிற்பவன்!

ஈனர் கண்டு நடுங்கும் எரிமலை
எதிரி நடுங்க முழங்கும் இடிவான்
மான வாழ்வின் மனித வடிவம்
மாசிலா நல்லறத்தின் மாற்றுரு
கூனர்க்கெல்லாம் நம்பிக்கைத் தூண்
கொடிய சிங்களத்தின் கொடும்பகை
தானே நடத்தும் தகுதி கொண்டோன்
தமிழர் வெம்போர் மிகுதி கண்டோன்

அமிர்தலிங்கன் ஆற்றல் மிக்கவன்!
தமிழர் தலைவன் ஆகி நிற்பவன்!

காரிருட்சிறை கண்ட செம்மல்
கட்டிக் குருதி சிந்திய காளை
நேரிழை மனையாள் சேயர் விழி
நீரிடை ஆடப் போரிடை நிற்போன்
சீரிய தொண்டன் செந்தமிழ் அன்னை
சிந்தை மகிழ வந்து பிறந்தவன்
பேரினை விரும்பாத பெரியான்
பேருக்கும் பெருமைக்கும் உரியான்

அமிர்தலிங்கன் ஆற்றல் மிக்கவன்!
தமிழர் தலைவன் ஆகி நிற்பவன்!

—காசி ஆனந்தன்

## அமிருக்கு வாழ்த்துக்கூற ஜனாதிபதி மறுப்பு!

### ஜே. ஆரின் தார்மீக இலட்சணம்!

தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் பிறந்தநாளையொட்டி சிறப்புமலரொன்று விழாக் குழுவினரால் 27.8.78ல் வெளியிடப்படுகிறது. இந்தச் சிறப்புமலருக்கு ஜனாதிபதி ஜே. ஆரிடமிருந்தும் வாழ்த்துச் செய்தியனுப்புமாறு கோரப்பட்டிருந்தது.

ஆனால் ஜனாதிபதியின் சார்பில் அவரது செயலாளர், திரு. அமிர்தலிங்கம் அவர்களை வாழ்த்திச் செய்திஏதும் அனுப்பிவைக்கக் கூடிய நிலையில் ஜே. ஆர். ஜெயவர்த்தன இல்லையென்று அறிவித்துள்ளார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு மலர்க் குழுவினரால அனுப்பிவைக்கப்பட்ட கடிதமும் அதற்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சார்பில் அவரது செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதமும் மலரில் இடம்பெறவிருக்கின்றன.

ஜே. ஆரின் பிறந்த நாளன்று முன்பு அமிர் அவரை வாழ்த்தினார்; அது தமிழர் பண்பாடு; ஆனால் ஜே. ஆரோ எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்ப மறுத்திருக்கிறார் - இதுதான் ஜே. ஆரின் தார்மீகப் பண்பாடு போலும்!

## "சன்சோனி கொமிஷன் ஈவிடென்ஸ்"

### இரண்டாவது இதழ் விற்பனையாகிறது

"சன்சோனி கொமிஷன் ஈவிடென்ஸ்" என்ற ஆங்கில வாரஏட்டின் இரண்டாவது இதழ் (26-8-78) இப்போது விற்பனையாகிறது.

19 8 78 வெளிவந்தமுதலாவது இதழ் கிடைக்கப் பெறாதவர்கள், "நிர்வாகி 194 ஏ. பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12" எனும் முகவரிக்கு ஒரு ரூபா அஞ்சற் கட்டளையனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

## வீரசிங்கம் மண்டபத்தில் பிறந்தநாள் விழா!

தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் 51 வது பிறந்த நாள் விழா 27.8 78 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ க்கள், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ்மகளிர் பேரவை, செந்தமிழர் இயக்கம், ஆகியவற்றின் பிரதிநிதிகள், மற்றும் தமிழ்ப்பிரமுகர்கள்; மதத்தலைவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குவார்கள்.

இவ்விழாவில் அமிர் அவர்களின் பிறந்தநாள் மலரும், தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்று நூலும் வெளியிடப்படும்.

### செல்வா சமாதியில் அஞ்சலி

தமது பிறந்தநாளான 26.8.78 சனிக்கிழமையன்று காலையாழ்ப்பாணத்திலுள்ள மூதறிஞர் தந்தைசெல்வா சமாதியில் தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அண்மையில் ஈழம் வந்து திரும்பிய திரு. சோ. சிவபாதசுந்தரம் தமது இலங்கைப் பயண அனுபவங்கள்பற்றி 'கல்கி' இதழில் தொடர் கட்டுரை எழுதிவருகிறார். அதில் தலைவர் திரு, அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றியும், தமிழ்ஈழப் பிரச்சினை குறித்தும் அவர் எழுதியுள்ள பகுதிகள் இங்கு இடம்பெற்றுள்ளன. —ஆர்.

# அன்றைய அமிரும் இன்றைய அமிரும்

கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் இறங்கி எனது நண்பர் ஒருவரை எதிர்பார்த்து நின்றேன்- அவர் வரத் தாமதமாகிவிட்டது அதற்குள், யாழ்ப்பாணத்திலிருந்து அடுத்த விமானமும் வந்து சேர்ந்து, நண்பர் அமிர்தலிங்கமும் மற்றவர்களும் தோன்றினார்கள். நண்பர் அமிர்தலிங்கம் உரிமையோடுவந்து, "நெடுநேரம் காத்திருக்கவேண்டாம், எனது காரில் ஏறிக்கொள்ளுங்கள்" என்று சொல்லி அழைத்துக் கொண்டு போய் நான் தங்கியிருந்த வீட்டில் விட்டுச் சென்றார்: அந்தக்கார் பிரயாணத்தில் அமிர்தலிங்கத்தோடு பேசிய அனுபவத்தை மறக்க முடியாது.

பல்கலைக் கழக மாணவனாகவும் சட்டக்கல்லூரி மாணவனாகவுமிருந்த போது அமிர்தலிங்கம் தமது பேச்சுவன்மையால் அரசியலில் புகுந்தவர். தமிழ் காங்கிரஸிலிருந்து செல்வநாயகம் கொள்கை அடிப்படையில் பிரிந்து சமஷ்டிக் கட்சி அமைத்தபோது அதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர் அமிர்தலிங்கம். சமஷ்டிக் கட்சிபெயரை மாற்றி, தமிழரசுக் கட்சியாக உருப்பெற்ற போது, கட்சியின் செயலாளராக நின்று அரசியலில் முழுப் பங்கும் ஏற்று வந்தார். பின்னர், இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்த கூட்டணியாக, இந்தியத் தொழிலாளர் கட்சி எல்லாம் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற இயக்கமாக மாறியதும் அதில் முக்கிய பங்கு அமிர்தலிங்கத்தைச் சேர்ந்தது. தலைவர் செல்வநாயகத்தின் மறைவுக்குப் பிறகு, இன்று அந்தக் கூட்டணியின் தலைவராக இருக்கிறார் அமிர்தலிங்கம்.

வயது ஏறி அனுபவம் முதிர, ஓர் அமைதியும் நிதானமும் ஏற்படும் என்பதை அமிர்தலிங்கத்திடம் கண்டேன். என்னோடு பேசும் போதெல்லாம் நிதானமாக அளந்து தான் பேசினார். கடந்த ஆகஸ்டில் நடந்த சம்பவங்கள் காரணமாக எவ்வித உணர்ச்சி வசப்பட்ட பேச்சிலும் ஈடுபடாமல், நிதானமாக அரசியல் நிலைமையை விளக்கினார். அவர் பேச்சிலிருந்து, கனல் கக்கப் பேசிப் பிடிவாதமாக நிற்கும் பழைய அமிர்தலிங்கமல்ல, பொறுமையோடும் நியாயத்தோடும் வாதாடித் தமிழர் நலனுக்கு வழி தேடும் தலைவர் அமிர்தலிங்கம் இவர் என்பதைக் கண்டேன்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை கொண்டிருக்கும் அமிர்தலிங்கத்துக்குச் சிங்கள அரசியல் வாதிகளைச் சமாளிப்பது ஒரு புறமிருக்க, தமிழ் இனத்திலேயே வளர்ந்து வரும் ஒரு தீவிர வாதத்தை எப்படிச் சமாளிப்பது என்பது பெரும் கவலையாயிருப்பதை உணர்ந்தேன். இந்த நிலைமையைப் புரிந்து கொள்வதற்குக் கடந்த கால இலங்கை அரசியல் சம்பவங்களை நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

1931ம் ஆண்டிலே டொனமூர் அரசியல் சட்டம் அமுலுக்கு வந்து, சர்வஜன வாக்குரிமை அளிக்கப் பட்டு, முதலாவது பொதுத் தேர்தல் நிகழ்ந்த போது, யாழ்ப்பாணத் தமிழர்கள் அந்தத் தேர்தலைப் பகிஷ்கரித்தார்கள். இலங்கைக்கு பூரண சுயராஜ்யம் வழங்க வழி வகுக்காத இந்த அரசியல் சட்டம் தேவையில்லை என்ற ஒரே கொள்கைக்காக அப்போது செல்வாக்கிலிருந்த "யாழ்ப்பாண வாலிபர் மகாநாடு" (Jaffna Youth Congress) என்ற அமைப்பு இந்தப் பகிஷ்கரிப்பை மிக வெற்றிகரமாக நடத்தியது. மிக முக்கிய தலைவர்கள் இந்தத் தீர்மானத்துக்கு வணங்கி, தேர்தலில் நிற்காமல் விலகி நின்றார்கள். ஆனால், ஒருவர்—புதிதாக பாரிஸ்டர் பட்டம் பெற்று இங்கிலாந்திலிருந்து திரும்பியவர்—ஜி.ஜி. பொன்னம்பலம்— இந்தப் பகிஸ்கரிப்பை எதிர்த்து, தேர்தலில் நின்று சட்ட சபையில் சேர்ந்தார்.

இவர் பின்னர், பெரும்பான்மையான சிங்களவரின் ஆதிக்கத்தைப் புரிந்து கொண்டு 'தமிழ் காங்கிரஸ்' என்ற அரசியல் கட்சியை நிறுவினார். 1939ல் சோல்பரி அரசியல் சட்டம் தயாரான போது சட்டசபையில் தமிழரும் சிங்களவரும் ஐம்பதுக்கைம்பது" பதவி பெற வேண்டும். என்று வாதாடினார். அது தோற்றுப் போய் விட்டது.

1947ல் புதிய சட்டத்தின் படி பொதுத் தேர்தல் வந்த சமயத்தில், பொன்னம்பலத்துடன் சேர்ந்திருந்த செல்வநாயகம், இலங்கைவாழ் இந்தியர்களுக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டம் சம்பந்தமாக, சிங்கள அரசு பக்கத்தில் பொன்னம்பலம் இருந்த காரணத்தினால், தமிழ் காங்கிரசை விட்டு விலகி, சமஷ்டிக் கட்சியை ஏற்படுத்தினார். இலங்கை வாழ் தமிழ் மக்கள் யாவருக்கும்— இந்திய வம்சாவழித் தமிழரும், இலங்கைத் தமிழரும்— தனி உரிமை வழங்கும் ஒரு சமஷ்டி அரசியல் (Federal Government) இலங்கையில் ஏற்பட வேண்டுமென்று வாதாடினார் செல்வநாயகம். இந்தக் கோரிக்கை சிங்களத் தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அன்றியும், பண்டாரநாயகா 1956ல் பிரதமராக வந்த சமயம் சிங்கள இனத்திற்கும், பௌத்த சமயத்திற்கும், சிங்கள மொழிக்கும் சட்ட மூலமாக முக்கியத்துவம் கொடுத்த போது, தமிழர் சமஷ்டிக் கட்சி தமிழரசுக் கட்சியாக மாறி, தமிழருக்குச் சமநீதி வழங்கப் போராடியது. கணவன் பண்டாரநாயகா காலமாகிய பின் பழைய சிங்களப் பூச்சாண்டி பெரும் பூதமாகத் தலையெடுத்ததும், தமிழினம் வெகுண்டெழுந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருப்

## சோ. சிவபாதசுந்தரம்

பெற்று, "சமஷ்டியும்வேண்டாம், சம அந்தஸ்தும்வேண்டாம், நாங்கள் தனித்து வாழ்வோம், நாட்டைப் பிரித்துக் கொடு" என்ற கோரிக்கைக்கு 1958 சம்பவங்களும் 1977 ஆகஸ்ட் சம்பவங்களும் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன. தமிழ் மக்கள் உள்ளங்களெல்லாம் வேதனைப்பட்டு, ஆற்றுமை காரணமாக வளர்ந்து விட்டது இந்த இயக்கம்.

இந்த இயக்கத்தைப் பற்றிக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் அரசியல் ஆராய்ச்சியாளர் பலவிதமாகச் சிந்தித்தாலும், இளம்மட்டங்களில் வளர்ந்திருக்கும் ஒரு பிடிவாதத்தையும் ஆத்திரத்தையும் இன்றைய நிலையில் எவராலும் மாற்ற முடியாமல் இருக்கிறது. இதில் ஒரு பெரிய ஆச்சரியமென்னவென்றால் புதிதாக வளர்ந்திருக்கும் இந்தத் தீவிர இயக்கத்தினருக்கு சிங்கள இனத்தின் மீது கூட அவ்வளவு வெறுப்பில்லை; "தமிழ் ஈழம்" என்ற தமிழ்ப் பிரதேச விடுதலையையும் பிரிவினையையும் கேட்கும் தமது இயக்கத்துக்கு விரோதமாயிருக்கும் தமிழர் மீதுதான் அவர்களுக்கு அதிகமான ஆத்திரமும் கோபமும், இதன் காரணமாக நிகழ்ந்த சில வன்முறைச் சம்பவங்கள் இன்றைய இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் சிந்தனையைத் தூண்டி விட்டிருக்கிறது.

தலைவர் அமிர்தலிங்கமும் சிந்திக்கிறார். இன்றைய அதிகாரத்தில் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சிச் சிங்களத் தலைவர்களும் சிந்திக்கிறார்கள். முன்பு ஒரு காலத்தில் சிங்களத்திற்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்த்துக் கொடுக்க வேண்டும் என்று பிரகடனம் செய்துவிட்டு, பின்பு கருத்தை மாற்றி பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து கொண்டு "சிங்களமே தனி மொழி" என்று சொல்லிப் பதவி பிடித்த பொதுவுடமைக் கட்சியினர். இப்போது பதவி இழந்த பின்னர், சம அந்தஸ்து தான் கொடுத்தாக வேண்டும் என்று சொல்லித் தமது சிந்தனையையும் வெளிப்படுத்துகிறார்கள்.

(கல்கி: 23-7-78)

★ ★ ★

இலங்கைப் பாராளுமன்றத்தில் அன்று காரசாரமான விவாதம் எதையும் நான் கேட்க முடியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் தமது கட்சி எவ்வகையிலும் வன்முறையில் ஈடுபடாது என்றும், அஹிம்சா முறையில் காந்தி வழியில் தமது இலட்சியங்களுக்காகப் போராடும் கொள்கையையே கடைப்பிடிக்கும் என்றும் பேசிக் கொண்டிருந்தார். தீப்பொறி பறக்கப் பேசும் பழைய அமிர்தலிங்கத்தைக் காணவில்லை; வயதும் அனுபவமும் பொறுப்பும் வளர்ந்த சாத்வீக அமிர்தலிங்கத்தைத்தான் கண்டேன்.

(கல்கி 6-8-78

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

# அமுதத் தலைவன் நீயே! புரட்சித் தலைவனும் நீயே!

திசைமாறிப் போய்விட்ட சமுதாயம் ஒன்று வலையுள் வீழ்ந்த மீனாய்த் துடிக்குது 350 ஆண்டுகளுக்கு மேலாய்.

கொத்தடிமை செய்தே கூன் விழுந்து விட்ட சமூக அமைப்பை கொண்டது அந்த சமுதாயம் சாதிச்சண்டையும், மாதமாச்சரியமும் அவ்வினத்தின் அடிமைத் தன்மையால் ஏற்பட்ட வடுக்களாகும்.

கூனை நிமிர்த்தி தலை எடுத்திடவே அவ்வினம் முயன்றாலும், அவர்தம் வாழ்விடத்தைப் பறித்தும், அறிவின் ஊற்றை அடைத்தும், வேற்று மொழியை திணித்தும், முழுமையாய் புதைகுழியில் தள்ளிட முப்பதாண்டுகளாய் ஒரு தீவிர முயற்சி புதிய ஏகாதிபத்தியத்தால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இந்த [illegible] சூழ்ந்த காலத்தில் அவ்வினத்தை வழி நடத்துவதெனில் அது பிரமனாலும் முடியாத செயலே. ஆனால் பிரமனுக்கே சவால் விட்டு அப்பொறுப்பை ஏற்றிட மானுடன் ஒருவன் முன்வருவானெனில் அதுபுதுமையே.

இப்புதுமை தமிழீழ மண்ணில் நடக்கின்றது. அகிலமும் ஆச்சரியத்துடன் பார்த்து நிற்கின்றது. பொறுப்பை தலையில் சுமக்கும் புரட்சித் தலைவனே வெற்றியின் முதற்படியை தாண்டியும் விட்டான்.

தந்தை செல்வாவின் நேர்மை — தீர்க்க தரிசனம் தலைவர் பொன்னாவின் நாவன்மை; இரும்புமனிதனின் ஆண்மை, கோமான் வன்னியரின் தூய்மையான பொதுவாழ்வு,— இவற்றின் கூட்டுத் தொகுப்பில் தலைவன் தேவைப்படும் காலத்தில் அத்தகைய தலைவனையே பெற்றுள்ளோம்,

ஆம் அண்ணன் அமுதலிங்கத்தை நாம் பெற்றுள்ளோம்,

அமுதலிங்கம் என்பவர் தனிமனிதரல்ல. அவர் முப்பத்தைந்து இலட்சம் தமிழ் மக்களின் கூட்டுத்தொகுப்பு அவர் சிரிக்கும் போது 35 லட்சம் தமிழரும் சிரிக்கின்றனர் என்பதே அதன் பொருள். அவர் முகம் சுழித்தால் அத்தனை தமிழரும் முகம் சுழிக்கின்றனர் என்பதே அதன் பொருள்.

அண்ணன் 51ம் அகவுள் நுழைவதை நாடே விழாவாக கொண்டாடுகின்றதெனில் தமிழினத்தின் சரித்திரத்தில் அடுத்த அத்தியாயம் எழுதப்பட ஆரம்பமாகின்ற தென்பதேயாகும்.

அமுதத் தலைவன் நீ!
புரட்சித் தலைவனும் நீயே!
என பரணி பாடுகின்றது தமிழுலகம்.

தமிழ் போல் தலைவா நீ வாழ்க! —வண்ணை ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எம்மைச் சிறுபான்மையினர் என்று அழைப்பதை நாம் எதிர்க்கிறோம்!

## 'சண்டே ஒப்சேவர்' இதழுக்கு தலைவர் சிவா அளித்த பேட்டி



"சண்டே ஒப்சேவர்'' ஏட்டின் சார்பாக பிரபல நிருபர் ரொஷான் பீரிஸ் (Roshan Peiris) அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு.மு. சிவசிதம்பரம் அவர்களைப் பேட்டி கண்டார். அந்தப் பேட்டி 20-8-78" சண்டே ஒப்சேவர்''இதழில்நடுப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அப்பேட்டியின் தமிழாக்கமே இங்கு இடம் பெறுகிறது—

கே:- ஆவரங்காலில் நடைபெற்ற இரண்டாவது தேசிய மாநாட்டில் நீங்கள் நிகழ்த்திய தலைமையுரையில் தமிழர்களின் உரிமைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். இத்தீவின் எதிர்காலத்தில் தமிழர்களுக்கு உறுதியான ஓர் இடம் உண்டு என்று ஜனாதிபதி ஜே.ஆர். அவர்கள் உறுதிமொழி தந்திருப்பதாக நீங்கள் கருதவில்லையா?

சிவா:- நான் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அந்தரங்க சுத்தியை சந்தேகிக்கவில்லை. அவர்தான் ஏற்றுக்கொண்டிருக்கும் அரசியல் தத்துவத்தின் அடிப்படையிலும் தனது நிலைப்பாட்டுக்கு அமைவாகவும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில்காட்டி வரும் அந்தரங்க சுத்தியை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் ஒரு தனி நபர் எப்போதும் பொருட்படுத்தப்படுவதில்லையென்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். தனி நபர்கள் எவ்வளவுதான் முக்கியத்துவம் பெற்றவர்களாக இருந்தாலும், எப்போதும் அப்படியே இருக்கப் போவதில்லை; ஒரு தனி நபரின் அந்தரங்க சுத்தியையும் நல்லெண்ணத்தையும் நல்லாதரவையும் விட அதற்கு மேற்பட்ட ஒரு நிலையே எமக்குத் தேவை. ஒரு தேசிய இனம் தனது நம்பிக்கையையும் எதிர்காலத்தையும் ஒரு தனி நபரின் கையில் தங்க விட விரும்பாது; நாம் எதிர்பார்ப்பது நிலையான ஓர் ஏற்பாடே.

கே:- ஜனாதிபதி ஜே.ஆர். தமிழர் பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதை நீங்கள் காணலாம். அரசாங்கம் சிறுபான்மை இன விவகாரங்களுக்குப் பொறுப்பாக அமைச்சு ஒன்றை நியமிக்க விரும்புகிறது..."

சிவா:- அதை நாங்கள் எதிர்க்கிறோம், நாம் சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுவதையோ—சிறுபான்மையினர் என்ற வட்டத்துக்குள் நாம் அடைக்கப்படுவதையோ—நாங்கள் விரும்பவில்லை. ஏனெனில் இன்று நம்மை நாம் ஒரு தேசிய நாட்டினம் என்று கருதுகிறோம்;

கே:- ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அந்தரங்க சுத்தியைசந்தேகப்படவில்லையென்று கூறினீர்கள். ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தி உங்கள் குறைகளை நீங்கள் தீர்த்துக் கொள்வதற்கு ஏன் முயற்சிக்கக் கூடாது?

சிவா:- நாம் தனி நாடு அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். எப்படியிருப்பினும் பேச்சு வார்த்தை நடத்துவதும் சாத்தியமே, ஆனால் இது பற்றி முடிவு செய்யவேண்டியது நான் சார்ந்துள்ள இயக்கமே தவிர— தனிப்பட்ட முறையில் நான் அல்ல; பேச்சு வார்த்தை சாத்தியமானதா அல்லவா என்பதை நான் சார்ந்துள்ள இயக்கமே முடிவு செய்ய வேண்டும். நான் கூறுவதை சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். இப்போது எங்கள் மக்கள் எமக்குத் தந்திருக்கும் ஆணை மிகத்தெளிவானது. அந்த ஆணையிலிருந்து பின்வாங்குவதற்கு எமக்கு அதிகாரம் கிடையாது. வேறு மாற்று வழி எதுவும் தென்படாததாலேயே எங்கள் சொந்தத் தனி நாட்டை உருவாக்க வேண்டும் என்ற இறுதி முடிவுக்கு வந்திருக்கிறோம். இதே கொள்கையை முன் வைத்தே நாம் கடந்த தேர்தலில் மக்களிடம் சென்றோம். எந்த வித சந்தேகத்துக்குமிடமின்றி மக்கள் அந்தக் கட்டளையை எமக்குத் தந்திருக்கிறார்கள். ஒரு ஜனநாயகக்கட்சி என்ற முறையில் எமது நிலையை நீங்கள் உணர்வீர்கள் என்று நினைக்கிறேன். எமது ஆற்றலுக்கேற்ற முறையில் எமது மக்களின் அபிலாஷைகளை ஈடேற்ற உழைப்பதே எமது கடமை.

கே: ஒரு தனிநாட்டுக்குப் பதிலாக உங்கள் முந்திய கோரிக்கையான சமஷ்டிக் கோரிக்கைக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறதா?

சிவா: இவைகள் உடன்பாடு காணப்பட வேண்டிய விடயங்கள். அதற்கு எமது மக்களின் விருப்பம் என்ன என்பதையும் நாம் உறுதியாக தெரிந்து கொள்ள வண்டும்.

கே: நாட்டிலுள்ள இன்றைய அரசியல் நிலையில் தமிழ் மக்களின் உரிமைகள் என்று நீங்கள் கூறுவன யாவை?

சிவா: எமது உரிமைகள் தமிழ் ஈழம் அல்லது எமது சுயநிர்ணய உரிமையிலிருந்து ஊற்றெடுக்கின்றன. இந்த அடிப்படையிலிருந்தே எமது மொழியுரிமை, எமது எதிர்காலத்தை நாமே முடிவுசெய்யும் உரிமை,எம்மை நாமே ஆளும் உரிமை போன்ற நாம் கோரும் உரிமைகள் தொடர்கின்றன. நான் முன்பு கூறியதுபோல

## நாம் சிறுபான்மை இனமல்ல; ஒரு தனித் தேசிய இனம்"

இதுதான் எமது மக்களிடமிருந்து நாம் பெற்றுள்ள கட்டளையாகும், எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து சுட்டிக்காட்டுவதானால் "போர்த்துக்கீயரிடம் இழந்துபோன எமது இறைமையை மீளப் பெறுவது" ஒன்றே நாம் முன்வைத்த கொள்கையாகும். இதிலிருந்து நாம் மாறுபடுவதானால், வேறு எத்தகைய அரசியல் நிலையை நாம் பின்பற்ற வேண்டும் என்பது பற்றி மீண்டும் எமதுமக்களிடமே நாம் கேட்கவேண்டும்.

கே: அரசாங்கம் அரசியலமைப்பில்தமிழுக்குஉரிமையளித்துள்ளது; தரப்படுத்தலை அகற்றியுள்ளது. இந்த இரண்டு விடயங்களையும் நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் இந்த நிலையில், தனிநாடு என்ற தீவிர நிலையிலிருந்து குறைந்த ஒரு நிலையை நீங்கள் முன்வைத்தால் என்ன?

சிவா: தமிழுக்கு அரசியல் சட்டத்தில் சில உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதையும், தரப்படுத்தல் நீக்கப்பட்டதையும் நான் வரவேற்கிறேன். ஆனால் அது எதுவரை? அடுத்த ஆண்டோ அல்லது அதன் பின்னரோ மறுபடியும் தரப்படுத்தல் முறை புகுத்தப்படமாட்டாதென்பது என்ன நிச்சயம்?நான் வீணைச் சந்தேகிப்பதாக நீங்கள் கருதலாம், ஆனால் [illegible] முள்ள மக்களாக நாம் வாழவே முடியாதென்பதை கடந்த 30 ஆண்டு கால அனுபவம் எமக்கு உணர்த்தியிருக்கிறது.

உதாரணத்துக்கு, எமது பாரம்பரியத் தாயகத்திலுள்ள எமது நிலப் பிரச்சினை குறித்து எடுத்துக் கொள்ளுங்கள். திட்டமிட்டு எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. அடுத்தடுத்த அதிகார பீடத்துக்கு வந்த சிங்கள அரசுகள் அனைத்தும் எமக்கு வழங்குவதாக கூறிய உரிமைகள் எல்லாம் உண்மையில் வெறும்"கடதாசி உரிமைகள்'' ஆகவே இருந்துள்ளன; இரண்டு பிரதான அரசியற் கட்சிகளானசிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின தலைவர்களானபிரதமர்கள் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவும், டட்லி சேனநாயகாவும், அரசாங்க ஆதரவுடன் நடைபெறும் குடியேற்றங்கள் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அவர்களைச் சிறுபான்மையாக்கும் ஒரு கருவியாக பயன்படுத்தப்படக் கூடாது என்பதை ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த இரு பெரும் தலைவர்களும் இந்த அங்கீகாரத்தை அளித்திருந்தும் கூட, பெரிய அளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. இதுமட்டுமன்றி இந்த இரண்டு தலைவர்களும் தமிழ் பிரதேசங்களுககு ஏதாவது ஒரு வழியில் சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டிருந்தனர். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை.

அடுத்து, அரசாங்கத் துறையிலும், பொதுத் துறையிலும் உள்ள உத்தியோக தொழில் வாய்ப்புக்களை எடுத்துக்கொள்ளுங்கள். தமிழ் மக்களின் விகிதாசாரத்தின் அளவுக்குக்கூட அவர்களுக்கு உத்தியோக வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. இத்தகைய கசப்பான அனுபவங்களின் காரணமாகத்தான் தமிழர்களின் இரு பெருங்கட்சிகளான தமிழ் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும், 1976ம் ஆண்டு நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசியமாநாட்டின் போதுஇணைந்து, சமத்துவமுள்ள மக்களாக வாழ்வதற்குள்ள ஒரேவழி, போர்த்துக்கீயரிடமிழந்த தமிழர் இறைமையை மீள்வித்து புனரமைப்பதே என்ற முடிந்த முடிவுக்கு வந்துள்ளன.

கே:. தனிநாடு என்ற கூட்டணியின் கொள்கை இலங்கை போன்ற சின்னஞ் சிறுதீவில் அரசியல்ரீதியாகச் சாத்தியமானது என்று கருதுகிறீர்களா?

சிவா:- சிங்கள மக்கள் எமது கோரிக்கையிலுள்ள நியாயத்தை உணர்வார்களாயின், அது அரசியல் ரீதியாக சாத்தியமானதே. நாம் கேட்பது உலக அரசியலில் ஏதோ புதுமையான தொன்றல்ல; ஆன் மகாராணிகாலத்தில் ஓர் உடன்பாட்டின் பேரில் ஸ்கொட்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் ஐக்கிய இராச்சியம் என்ற பெயரில் ஒரே நாடாகஇணைந்தன. ஆனால் இன்று ஸ்கொட்லாந்தும், வேல்சும்' இன்று மீண்டும் தம்மைத்தாமே தனி நாடுகளாக ஆக்கிக்கொண்டுள்ளன.

ஸ்கொட்லாந்துக்கும், வேல்சுக்கும் அதிகாரங்களைப் பங்கீடு செய்வது சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசு ஒரு வெள்ளையறிக்கையை விடுத்தது. அதன் பின்னர், ஸ்கொட்லாந்தும், வேல்சும் தனித்தனியாக தமது சொந்தத் தேசிய பாராளுமன்றத்களை வைத்துக் கொள்ளவும், இந்தப் பாராளுமன்றங்களுககு சில குறிப்பிட்ட அதிகாரங்களை பங்கீடு செய்யவும் வழிவகை செய்யும் சட்டத்தையும் கொண்டுவந்தது ஸ்கொட்டிஷ் தேசியவாதிகள் இதை ஏற்றுக்கொள்ள மறுத்து தொடர்ந்து சுதந்திரத் தனிநாட்டுக்காகப் போராடுகிறார்கள்.

"நீங்கள் இலங்கைத் தீவின் பரப்பளவு பற்றிச் சொல்கிறீர்கள். சிங்கப்பூர் பற்றி என்ன கூறுகிறீர்கள்? எம்மிலும் சிறிய நாடான சிங்கப்பூர், இன்று மலேசியாவிலிருந்து பிரிந்து தனிநாடாக வாழ்கிறது. ஜனாதிபதி ஜே. ஆர் கூட, சிங்கப்பூர் முன்னேற்றமடைந்துள்ள ஒரு

—6-ம் பக்கம் பார்க்க

ENGLISH
— University —
— Accountancy —
— Banking —
மாணவர்க்கு
யாழ்நகரில்
3-9-78 ஆரம்பம்
கொழும்பில்
Brighton
கல்வி நிலையத்தில்
நடைபெற்ற பயிற்சி
Muthulingam's
ENGLISH
ACADEMY
திருநெல்வேலி
வடக்குச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு:
நேரில்/தபாலில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மூன்றெழுத்து' தந்துசென்ற 'எட்டெழுத்து' மந்திரம்!

அன்பு நண்பா,

தங்கத் தமிழீழத்தின் தவப்பயன்— தடுமாறி நின்ற தமிழ்ச் சமுதாயத்தின் தலைவிதியை மாற்ற வந்தோன்— ஈழத்தமிழகத்தின் எழுஞாயிறு— அடிமை விலங்கு பொடிபட ஆர்த்தெழுந்து போர்ப்பரணி பாடிடும் புரட்சி வீரன்— மூபத்து ஆண்டுகளாய் தமிழர் விடுதலைப் படையின் முனைஞேடும் தளபதி— நேர்மைக்கும் வாய்மைக்குமன்றி வேறு யாருக்கும் தலைவணங்காச் சுத்த வீரன்— ஈழத்தமிழினத்தின் நடமாடும் வரலாறுனேன்— படைபல நடத்திக் களம்பல கண்டு வாகை சூடிய ஆற்றல் மறவன்— நாயினும் கீழாய் செந்தமிழ் நாட்டார் நலிந்திடும் நிலை மாற்றிட நானகு முறை சிறை சென்ற தியாக வீரன் —இளைய தலை முறையின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பேறு பெற்றேன்— தந்தை செல்வாவின் திருவாயினுல் தன் 'அரசியல் வாரிசு' என அழைக்கப்படும் தகைமை பெற்றேன்— சோர்வென்பதே அறியாது சுழன்று பணியாற்றிடும் தூயநெஞ்சன்— உயிருக்கு அஞ்சாது ஊருக்கு உழைத்திடும் உண்மைத தொண்டன்— எங்கள் அண்ணன்— இதயத் தலைவன் அமிர்தலிங்கம் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் 26— நமக்கோர் திருநாள் தான்— இதிலே ஐயமில்லை!

ஆம் இந்த ஆண்டு ஆகஸ்ட் 26— நம் இனத் தலைவனுக்கு அகவை ஐம்பத்தியொன்று; அதையொட்டி தமிழன் களிப்படைகிருன்; தலைவனுக்கு வாழ்த்துக் கூறுகிருன்; தலைவனுக்கு நோயற்ற உடலும் நீண்ட ஆயுளும், தெளிந்த சிந்தையும் செயல்திறனும் மேலும் மேலும் அருள்வாய் என்று இறைவனை வேண்டுதல் செய்கிருன்; விழா எடுத்துப் பெருமிதமடைகிருன்! இது இயல்பானது; உள்ளத்தில் பொங்கி வழியும் தமிழ் தேசிய உணர்வின் வெளிப்பாடு என்பதை நியாய புத்தி படைத்த எவருமே ஒப்புக்கொள்வர்!

ஆனுல் எதையுமே கிண்டல் செய்வதையும், கேலி பேசுவதையுமே தமது செயலாய்க் கொண்டுவிட்ட ஒரு கூட்டத்தினர், அண்ணனுக்கு— நம் ஆருயிர்த் தலைவனுக்கு தமிழ்க் குலம் எடுத்திடும் பிறந்த நாள் விழா பற்றியும் எட்ட நின்று ஏளனம் புரியக் கூடும்; தமது கயமைச் சேற்றை வாரி வீசிடக் கூடும். அதுபற்றி நமக்கு அக்கறையில்லை; நாம் ஆத்திரமடைய வேண்டியதுமில்லை!

தலைவர் அமிருக்கு பிறந்த நாள் விழா எடுக்கப்படுகிறது என்ருல்— அப்படியொரு பிறந்த நாள் விழா நடத்தித்தான் அவரது ஆற்றலை உலகுக்கு எடுத்துக் கூற வேண்டிய நிலையில்— அவருக்கு விளம்பரம் தேடித்தர வேண்டிய நிலையில் அவரோ நாமோ இல்லை என்பதை யாரும் மறுத்திடத் துணியமாட்டார்கள். இந்த நாட்டில் அண்மைக்கால வரலாற்றில் தந்தை செல்வாவுக்குப் பின்— தலைவர் அமிருக்குக் கிடைத்துள்ள புகழ் போல— தலைவர் அமிருக்கு கிடைத்துள்ள விளம்பரம் போல— வேறு யாருக்கும் கிடைத்ததில்லை!

அவர் புகழைத் தேடிப்போவதில்லை; புகழ் அவரை நாடி வருகிறது; அவர் துளிகூட விளம்பரப் பிரியர் அல்லர்; ஆனுல் எதிரிகளே அவருக்குப் போதிய விளம்பரம் அளித்து வருகின்னர். 'அமிர்தலிங்கம்' என்ற பெயர் இன்றைக்கு இத்தீவிலுள்ள ஒவ்வொரு தமிழனின் நாவில் மட்டுமல்ல— ஒவ்வொரு சிங்களவனின் நாவிலும் உச்சரிக்கப்படுகிற அளவுக்கு 'எட்டெழுத்து' மந்திரமாக ஓங்கி ஒலித்தபடிதான் இருக்கிறது!

இந்த நிலையில்— தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு பிறந்த நாள் விழா எடுத்து மகிழுகிறோமென்ருல்— அது ஏதோ அவருக்காக செய்யப்படும் ஒரு தனிப்பட்ட பாராட்டு என்று யாரும் கருதிடத் தேவையில்லை; தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இன்று ஒரு தனி மனிதர் அல்லர்; அவர் இந்நாட்டுத் தமிழ் தேசிய எழுச்சியின் மொத்த வடிவம்; தமிழீழ விடுதலைப் போரின ஈட்டி முனையும் அவரே; 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகள் அபிலாஷைகள் அனைத்தும் ஒன்று திரண்டு நிற்கும் ஒப்பரிய ஓர்வடிவமாக அமிர் அண்ணன் இன்று விளங்குகிருர்! எனவேதான் அவருக்கு தமிழர் எடுக்கின்ற விழா— உண்மையில் தமிழ்த் தேசியத்தின் எழுச்சி விழா என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்!

இன்றைக்கு அமிர் அண்ணனுக்கு 51 வயது ஆகிறது என்ருல்— இதிலே அவரது கடந்த முப்பது ஆண்டுகால வரலாறு, ஈழத் தமிழினத்தின் வரலாருகவே மாறிவிட்டது. தமிழினத்தின் மீட்சிக்கு— தமிழ்க்குலத்தின் நல்வாழ்வுக்கு— உழைத்திடா நாளெல்லாம் பிறவா நாளே என்று கருதி ஒவ்வொரு மணித்துளியும் நாடு, இனம், மொழி, சமுதாயம்— என்று உழைத்துக் கொண்டேயிருக்கும் ஒப்பரிய ஒரு தொண்டரை— நம் தலைவராக— அண்ணனுக— பெற்று இருக்கிறோம்.

முப்பதாண்டுகளுக்கு முன் முகிழ்த்தெழுந்த இந்த விடுதலை இயக்கத்தை உருவாக்கி—செந்நீரும் கண்ணீரும் சிந்தி தியாகத் தீயில் குளித்து இதை வளர்த்தெடுத்து—தமிழினத்தின் பாதுகாப்பு அரணுக ஆக்கித்தந்திட்ட மாபெருந்தலைவர்கள் பலா மறைந்துவிட்டார்கள். இன்று தந்தை செல்வா நம்மிடையே இல்லை; அமரர் வன்னிய சிங்கம் நம்மிடையே இல்லை; இராசவரோதயம் நம்மிடையே இல்லை; இரும்பு மனிதர் இ.மு.வி. நம்மிடையே இல்லை; ஆனுல் இத்தலைவர்களது கூட்டுமொத்த உருவமாக—அவர்களது அடிச்சுவட்டில் வளர்ந்து வந்த அண்ணன் அமிர்தலிங்கம் ஒருவரே இன்றைக்கும் இயங்கிக்கொண்டிருக்கிருர்; இயக்கத்தைக் கட்டிக்காத்து வழிநடத்திக்கொண்டு இருக்கிருர்!

## அரசியல் மேடை

விடுதலை இயக்கத்தின் முதல் தலைமுறை மறைந்து விட்டது; இரண்டாவது தலைமுறையும் மறைந்து விட்டது; இப்போது மூன்ருவது தலைமுறையைச் சேர்ந்த அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களிடமே தமிழினத்தின் சுமையைத் தாங்கி நிற்கும் பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தலைவர் அமிர் அவர்களை ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகாலமாக நான் அறிவேன். பள்ளி மாணவனுக—எட்டாம் வகுப்பு மாணவனுக இருந்த போது—1954ம் ஆண்டு வீட்டாருக்கும் தெரியாமல் தமிழரசுக்கட்சியின் செயலகத்துக்கு வந்து, அண்ணன் அமிரின் கையினுல் கறுப்புக்கொடி பெற்று, சேர். 'ஜோன் கொத்தலாவலைக்கு கறுப்புக்கொடிகாட்டிய அந்தநாள் தொட்டு அவரை அறிந்திருக்கிறேன். எட்ட நின்று அவரது இடியோசை முழக்கங்களைக் கேட்டிருக்கிறேன். சிறுவனுக இருந்த போது. அவரது தமிழரசு வாலிபமுன்னணிமாநாட்டுத் தலைமையுரையாகிய "நமது இலட்சியம்" என்ற நூலைப்படித்துப்பாடம் செய்துமிருக்கிறேன். இப்போது அரசியல் சிந்தனையில் அவரும் முதிர்ச்சியடைந்திருக்கிருர்; நானும் எனது சிந்தனையில் முதிர்ச்சியடைந்ததின் காரணமாக அறிவு முனையில் நின்று அமிர் அண்ணனை விமரிசனக் கண்ணேட்டத்தோடு கூடப் பலதடவை பார்த்திருக்கிறேன்; "Constructive criticism" 'ஆக்கபூர்வமான கண்டனம்' செய்திருக்கிறேன்.

ஆனுல்—அண்ணன் அமிரின் அணுகுமுறைகளை—அரசியற் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் எவரும் ஒன்றே ஒன்றை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது! அவரது உள்ளத்தூய்மை, அந்தரங்க சுத்தி, தியாகம், சேவை மனப்பான்மை, இல்ட்சியப்பிடிப்பு, நிறைவான ஒழுக்கம், நெறிதவரு வாழ்க்கை, கறைபடியாக்கரம், ஆகிய பண்புகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவையாக பரிசுத்தமானதாக விளங்குவதை அவரது அரசியல் எதிரிகளும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்!

தன்மனதில் பட்டதை மறைக்காமல் வெளிப்படையாக உடனே கொட்டி விடுவது அமிரின் இயற்கையான சுபாவம்; இது அவரது நேர்மைக்கு — வெள்ளையுள்ளத்துக்கு— திறந்தமனத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சொல்வதைச்சற்று இறுக்கமாகச்சொல்வதும் அவரது சுபாவம். இதைப்புரிந்து கொள்ளாதவர்களே அவரை 'முன்கோபி' என்கிருர்கள். "கடிதோச்சி மெல்ல எறிக..." என்பதைப் புரிந்து கொண்டிருக்கும் தலைவர் அமிர், கோபம் போலக்காட்டிக்கொண்டாலும் அடுத்த [illegible] விடுவதைப் பலமுறை கண்டிருக்கிறேம்!

இச்சமயத்தில் இரண்டே இரண்டு வேண்டுகோள்களை அண்ணன் அமிர் அவர்களுக்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

உங்களைக் கண்டிப்பவர்கள்— உங்களை இடித்துரைப்பவர்கள்— அனைவருமே உங்களுக்கு விரோதிகள் என்ருே எதிரிகள் என்ருே தயவு செய்து கருதி விடாதீர்கள்! உங்களுக்குத் துதிபாடி உங்கள் நிழலில் வளர விரும்புவோர் எல்லாம் உங்கள் நண்பர்கள் என்றும் மயங்கி விடாதீர்கள்.

"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமையவர்"
"செவிகைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ் தங்கும் உலகு"

என்றெல்லாம் தமிழ் மறை கூறுவது உங்களுக்குத் தெரியாததல்ல; உங்களை இடிக்கும் நண்பர்களே உங்களது உண்மையான நண்பர்கள்; அளவுக்கு விஞ்சியும் அனுவசியமாகவும் உங்களுக்கு சதா புகழாஞ்சலி செய்வதையே தம் தொழிலாகக்கொண்டிருப்போர் உங்களை அறியாமலே உங்களுக்கு குழி தோண்டுவோர்; இப்படிப்பட்டவர்களையிட்டு சற்று எச்சரிக்கை தேவை!

இயக்கம் வேகமாக இயங்கவேண்டுமென்று உங்களுடன் சற்றுக் காரசாரமாக வாதாடும் இளைஞர்கள் அத்தனைபேரும் உங்களைத் தம்இதயத்தில் வைத்து ஏற்றிப்போற்றுவோரே தவிர—உங்களுக்கு எதிரானேர் அல்ல; இது உங்களுக்கு நன்ருகத் தெரியும்! உங்கள் தலைமையை அப்படியே ஏற்றுக் கொள்பவர்கள் அவர்கள்!

இதேபோல மற்ருென்றும் உங்களைக் கேட்பேன்!

இன்றைக்கு தமிழினத்தை வழிநடத்துகின்ற பாரிய பொறுப்பு—தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற மாபெரும் பணி—உங்களிடத்திலேயே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உங்கள் காலத்தில் தமிழீழம் சுதந்திரம் அடையும் என்று தீர்க்க தரிசனம் கூறிவிட்டுச் சென்றிருக்கிருர் தந்தை செல்வா அவர்கள், அந்த நம்பிக்கையுடன்— பசி கொண்ட குழந்தை தாயின் முகத்தையே பார்ப்பதுபோல விடுதலைப்பசி கொண்ட தமிழ் இளைஞர்கள் தாயினும் நல்ல தலைவராகிய உங்கள் முகத்தையே இன்று பார்த்துக்கொண்டிருக்கிருர்கள்!

விடுதலை இயக்கத்தில் மண்டிக் கிடக்கும் குப்பை கூழங்களை கூட்டிப் பெருக்கி புனிதப்படுத்தி—களைகளைப் பிடுங்கி—வேகமாகவும், தூய்மையாகவும் இயக்கத்தை வழிநடத்திச் செல்லக் கூடிய வல்லமையையும், ஆற்றலையும், அதிகாரத்தையும், ஆளுமையையும்காலம் உங்கள் கரங்களிலே இன்று பத்திரமாகஒப்படைத்திருக்கிறது. உங்கள் கரங்களை பலப்படுத்திட, பலலாயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் தயாராகக் காத்து நிற்கிருர்கள்!

எனவே நாட்டு விடுதலை என்றமகோன்னத இலட்சியத்தை வென்றெடுப்பதொன்றிலேயே உங்கள் நேரம் நினைப்பு, அனைத்தையும் செலவிடவேண்டிய நீங்கள்—விடுதலைத் தளபதியாக—தலைவனுக விளங்கிடவேண்டிய நீங்கள்—சாதாரண அரசியல்வாதியாக மாறி அற்ப விடயங்களைக் கவனித்துக் கொண்டிருப்பதில் உங்கள் ஆற்றலை வீணடிக்காதீர்கள்! காலத்தை அவம்போக்காதீர்கள்! பொதுமக்களும் அற்பவிடயங்களுக்காக அமிரிடம் செல்வதைக் கைவிட வேண்டும்!

அமிர் அண்ணன் காலத்தில் சுதந்திரத் தமிழ்ஈழம் மலர்ந்தே தீரவேண்டும்; இது காலத்தின் கட்டளை; இது இறைவனின் கட்டளை; இது தந்தைசெல்வாவின் கட்டளை. இக் கட்டளையை நிறைவேற்றும் ஒரு கருவியே 'செல்வா' எனும் மூன்றெழுத்து மந்திரம் தந்துவிட்டுச் சென்ற அமிர்தலிங்கம்' எனும் எட்டெழுத்து மந்திரம்! அமிர் சகலநலனும் பெற்றிட தமிழீழத் தாய் கருணை பொழிவாளாக!

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆகஸ்ட் கலவரத்தின்போது சிங்களவருக்கு யாழ்ப்பாணத்தில் ஒருவித இம்சையும் நடைபெறவில்லை!"

## குறுக்கு விசாரணையில் சிங்களச் சாட்சி நிகால் கனகரத்தின இதை அப்படியே ஒப்புக்கொண்டார்

1977 ஆகஸ்டில் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது யாழ்ப்பாணத்தில் சிங்களவர் எவரும் கொல்லப்படவில்லை; பௌத்த கோவில்கள் எதுவும் சேதப்படுத்தப்படவில்லை; சிங்களப் பெண்கள் எவரும் முறைகேடாக நடத்தப்படவில்லை!

இந்த மூன்று உண்மைகளையும் சன்சோனி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த சிங்களவரான நிகால் கனகரத்தின என்பவர் சட்டத்தரணி திரு. அண்டலூட்டின் கேள்விக்குப் பதிலளிக்கையில் ஒப்புக்கொண்டார்.

நிகால் கனகரத்தின என்ற இச்சாட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், தமிழ் இளைஞர்களுக்கும் எதிராக பல குற்றச் சாட்டுக்களை சுமத்தி பல நாட்களாக சாட்சியமளித்து வருவது தெரிந்ததே.

இவரை இறுதியாக குறுக்கு விசாரணை செய்த சட்டத்தரணி அண்டலூட், "இவ்வளவுக்கும் பின்னராவது யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்கள வராவது கொல்லப்படவில்லை; பௌத்தகோவில்கள் எதுவும் உடைக்கப்படவில்லை; சிங்களப்பெண்கள் எவரும் முறைகேடாக நடத்தப்படவில்லையென்பதை ஒப்புக்கொள்ளுகின்றீரா" என்று சாட்சியைப் பார்த்துக் கேட்ட போது, சாட்சி 'ஆம்' என்று ஒப்புக் கொண்டார்.

### வதந்திகளை ஏற்கமுடியாது!

திரு. நிகால் கனகரத்தின என்பவர், ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த மகஜரிலும் ஆணைக்குழு முன் கூறிய சாட்சியத்திலும், அவர் தெரிவித்த தகவல்கள் எங்கிருந்து கிடைத்தன என்பதைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இதையொட்டி ஆணையாளர் திரு. சன்சோனி குறிப்பிடுகையில்; தகவல் எங்கிருந்து கிடைத்தன என்பதை சாட்சி வெளியிட மறுப்பதால், அவர் கூறியவை வெறும் வதந்தியாகவே கருதப்பட வேண்டியவையென்றும், ஆகஸ்ட் கலவரம் தொடர்பாக நேரில் கண்ட நிகழ்ச்சிகள்பற்றி விசாரணை செய்ய இக்கமிஷன் நியமிக்கப் பட்டுள்ளதென்றும் வதந்திகளை மட்டும் வைத்துக்கொண்டு தம்மால் விசாரணை செய்ய முடியாதென்றும் தெரிவித்தார்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றியும் வங்கிக் கொள்ளைகள் பற்றியும் மற்றும் கலவரங்கள் தொடர்பான விஷயங்கள் பற்றியும் ஆதாரமில்லாத தகவல்களை இவ்வாணைக் குழு முன் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்"

இவ்வாறு தெளிவான சொற்களில் ஆணையாளர் திரு. சன்சோனி சாட்சியமளித்த கனகரத்தினவிடம் அறிவித்துள்ளார்.

"யாழ்ப்பாணத்திலிருந்து மீன்பெட்டிகளில் சிங்களவர்களின் சடலங்கள் அடைக்கப்பட்டு தெற்கே அனுப்பப்படுகிறது" என்பன போன்ற பல வதந்திகளினாலேதான் இக்கலவரம் நடந்துள்ளதென்றுகுறிப்பிட்ட திரு. சன்சோனி வதந்திகள் பற்றி இங்கு விசாரணை நடத்தவோ, அதன்மீது நடவடிக்கையெடுக்கப்படவோ மாட்டாது என்றும்தெரிவித்தார்.

### இனப்போர்

1977 ஆகஸ்ட்டில் நடைபெற்ற கலவரம் அரசியல் கட்சிகளுக்கிடையே நடைபெற்ற போர் அல்ல; இரு இனங்களுக்கிடையேயான போர்" என்றும் ஆணையாளர் திரு. சன்சோனி தெரிவித்தார்.

"ஆணைக்குழு விசாரணையின் போது சட்டத்தரணி டபிள்யூ. சி. குணதிலகாவுக்கும், சட்டத்தரணி சண்முகலிங்கத்துக்குமிடையே நடைபெற்ற சொற் போரின் போது குறுக்கிட்ட ஆணையாளர் திரு. சன்சோனி மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

சட்டத்தரணி குணதிலகா:- 'சட்டத்தரணி சண்முகலிங்கம் சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகிப்பவர்."

சண்முகலிங்கம்:- ஆனால் நானும் ஆகஸ்ட் கலவரத்தின் போது தாக்கப்பட்டேன். நான் ஆகஸ்ட் 13ம் திகதியன்று மன்னருக்கு வழக்கொன்று சம்பந்தமாகச் சென்றிருந்தேன். ஆகஸ்ட் 16ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு புறப்பட்ட சம்பந்தப்பட்ட புகை வண்டியில் நானும் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் என்னையும் தாக்கினர்கள்.

நான் எந்தக்கட்சியைச் சேர்ந்தவன் என அவர்கள் என்னைத் தாக்கிய போது கேட்கவில்லை. நான் தமிழன் என்ற ஒரேயொரு காரணத்தினலேயே என்னைத்தாக்கினர்கள்.

ஆணையாளர் சன்சோனி:- "இதுவரைக்கும் இக்கலவரம் கட்சிப்போரென்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இது ஓர் இனப்போர்என்றே தென்படுகிறது."

### ஆணையாளர் மறுப்பு

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கமும் திருமதி அமிர்தலிங்கமும் 8.9.78ல் வெளிநாடு செல்வதை தடை செய்து, அவர்களை ஆணைக்குழு முன் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று சிங்கள இளைஞர் பேரவையின் சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளை ஆணையாளர் திரு. சன்சோனி நிராகரித்ததுடன், திரு. அமிர்தலிங்கத்தின் வெளிநாட்டுப் பயணத்தை தாம் தடைசெய்யப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

---

# சனியும் ஞாயிறும் பல நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 26, 27 (சனி, ஞாயிறு) ஆகிய இரு நாட்களும் இயக்கம் சம்பந்தப்பட்ட பலநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

### சனிக்கிழமை

26.8.78 சனிக்கிழமை தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்தின் பிறந்த தினமாகும். அன்று காலை காங்கேசன்துறைத்தொகுதிக்கிளைகளின் மாநாடு காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் திரு. அமிர்தலிங்கம் பா. உ. தலைமையில் நடைபெறுகிறது.

அதே தினம் பிற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணித் தலைமைச் செயலகத்தில் தமிழ் இளைஞர் பேரவை மத்திய செயற்குழுக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் புதியஅரசியல் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளில் நடைபெறவேண்டிய எதிர்ப்பியக்கம் பற்றி ஆராயப்படும். இக்கூட்டத்தில் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ உரையாற்றுவதுடன் இளைஞர்களின் சந்தேகங்களைப்போக்குவார்.

அன்று மாலை தீண்டாமை, சாதிப்பாகுபாடு சம்பந்தமாக இதுவரை முறைப்பாடு செய்தவர்களை கூட்டணிச் செயலகத்தில் திரு. வி. என். நவரத்தினம் தலைமையிலான தீண்டாமை ஒழிப்புக் குழு சந்தித்து குறைபாடுகளை நீக்குவதற்கான வழி வகைகளை ஆராயும்.

### 27.8.78

27.8.78 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கூட்டணி செயலகத்தில் தமிழ் மகளிர் பேரவை மத்திய செயற்குழு கூடுகிறது.

காலை 10 மணிக்கு கூட்டணிப் பாராளுமன்றக் குழு கூடுகிறது.

காலை 11 மணிக்கு கூட்டணியின் மத்திய செயற்குழு கூடுகிறது.

பிற்பகல் 4 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தீண்டாமையொழிப்பு மாநாடு நடைபெறும்.

மாலை 6மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில தலைவர் அமிர் பிறந்தநாள்விழா [illegible] கிறது.

---

# தியாகி சிவகுமாரன் பிறந்த நாள்

தமிழ்த்தியாகி சிவகுமாரன் பிறந்தநாள் 26.8.78 ஆகும். அதையொட்டி உரும்பிராயிலுள்ள சிவகுமாரன் இல்லத்தில் அன்றுமாலை ஓர் தேனீர் விருந்துக்கு சிவகுமாரனின் அன்னையார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை ஏற்பாடுசெய்துள்ளார்.

---

# இராசவரோதயம் நினைவுக்கூட்டம்

இடம்: த. வி. கூ. தலைமைச் செயலகம்,

காலம்: 2-9-78 சனிக்கிழமை மாலை 6.30 மணி,

தலைவர்: திரு. வெ. யோகேஸ்வரன் பா. உ.

தலைப்பு: "திருமலை ஈந்த தலைவன் அமரர் ந. இ. இராசவரோதயம்"

பேசுவோர்:

(1) கவி. காரை சுந்தரம் பிள்ளை.

(2) டாக்டர் ச. அ. தருமலிங்கம் முன்னள் மாநகர முதல்வர்.

(3) கோவை மகேசன்.

---

# என்றும் வாழ்க

தாழ்வுற்ற தமிழினத்தின் வாழ்வுக்கு
    உயிரூட்டும் அமுதஊற்று!
தமிழீழ வழிகாண தந்தைசெல்
    வாதந்த ஒளியின்கீற்று!
வாழ்வென்றும் தாழ்வென்றும் வளையாத
    கொள்கைமிகும் உணர்ச்சிக்காற்று!
வண்தமிழர் வாழவென வந்தஇவன்
    வாழ்கவென தமிழில்போற்று!

தானைகொடி கொற்றமொடு தாரணியில்
    ஆண்டஇனம் தாழ்ச்சியுற்று
ஏனழிய வேண்டுமென இடிமுழக்கம்
    செய்துரிமை கேட்கும்ஏந்தல்!
ஆனவரை சமஉரிமை அரசியலில்
    பெறமுயன்று தோற்றபின்னர்
தானெமக்குத் தமிழ்ஈழம் தான்விடிவென்
    றுணர்ந்துழைக்கும் தலைவன்வாழி!

அடிமைவிலங் கறுத்தெறிய அயராது
    போராடி ஆட்சியாளர்
அடக்குமுறை சிறைவாசம் சொத்தனைத்தும்
    பறிமுதலென் றெத்தனையோ
கொடுமைகளை எதிர்கொண்டும் குலையாத
    உறுதிகொண்ட கர்மவீரன்!
குவலயத்துக் கெமதுரிமை தனைவிளக்கிக்
    குரல்கொடுக்கும் தீரன்வாழி!

ஆட்சியினில் எதிரமரும் ஆற்றல்மிகும்
    எதிர்க்கட்சித் தலைவன்வாழ்க!
அடக்குமுறைக் கடிபணிய மறுத்துரிமை
    கேட்குமிவன் என்றும்வாழ்க!
மீட்சியின்றி யடிமைகளாய் இருக்குமினம்
    மேதினியில் மீண்டும்ஆண்டு
மேன்மையுறப் போராடும் மேதைஇன்று
    போலென்றும் இனிதுவாழ்க!

—க. கணேசலிங்கம்

---


● Now on Sale:

**The Sansoni Commission Evidence**

A WEEKLY PAPER

Every Saturday beginning August 19.

A Full, authentic account of the proceedings containing material hitherto not published, and not likely to be published in the future in any other medium. Please reserve your copies with your news agent to ensure your regular reading.

Price Re. 1/- only

News Agents please contact:-

Manager,
Ceylon News Papers Ltd.
194A, Bandaranayake Mawathe,
Colombo-12.



**Producers and Exporters of Traditional and non Traditional Products are requested to reply in English to:-**

T. SARAVANAPAVAN,
P. O. Box. 1131,
Medicine Hat
Alberta,
Canada — TIA 7H3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிரின் எதிர்காலமும் இனத்தின் எதிர்காலமும்!

ஒரு சமுதாயத்தின் தலைவிதி அந்தச் சமுதாயத்தை வழிநடத்தும் தலைவனின் தலைவிதியோடு தான் பெரும்பாலும் பின்னிப் பிணைந்திருக்கிறது. தலைவனின் உயர்ச்சியே ஒரு சமுதாயத்தின் உயர்ச்சி; தலைவனின் வீழ்ச்சி அச்சமுதாயத்தின் வீழ்ச்சி; தனது சொந்த வாழ்க்கைவேறு, அரசியல் வாழ்க்கை வேறு என்றில்லாமல், முழுவாழ்வையும் நாட்டுக்காக அர்ப்பணித்துவிட்ட தலைவனின் கரங்களிலேயே ஒரு சமுதாயத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் தங்கியிருக்கிறது.

மகாத்மாகாந்தியின் தலைவிதியும், இந்தியத் துணைக் கண்டத்தின் தலைவிதியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தது. அதேபோலத்தான் மாமேதை லெனினும் சோவியத்தும், ஹோசிமின்னும் வியட்னுமும், முஜிபுர் ரகுமானும் வங்கதேசமும், சீனுவும் மாசேதுங்கும்— என்று இவ்வாறு பல நாடுகளையும் அவற்றின் தலைவிதியை நிர்ணயித்த தலைவர்களையும் உதாரணமாகக் கூறமுடியும்.

அதே வரிசையில்தான் தந்தைசெல்வாவுக்குப்பின் இன்று தமிழ் ஈழத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் திரு. அமிர்தலிங்கத்தின் எதிர்காலத்திலேயே தமிழ் ஈழத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதன் எதிர்காலமும் இன்றைக்குத் தங்கியிருக்கிறது,

அண்மையில் "சோதிடமலர்" என்ற ஈழத்துச் சஞ்சிகையொன்று தலைவர் அமிர்தலிங்கத்தின் எதிர்காலப் பலாபலன்களைக்கணித்து எழுதியிருந்தது. சோதிடத்தில் எனக்கு நம்பிக்கை உண்டோ இல்லையோ, தலைவர் அமிர்தலிங்கத்தின் எதிர்காலம்தான் தமிழினத்தின் எதிர்காலம் என்று நம்புபவன் நான். அவரது எதிர்காலம் நன்றாக பிரகாசமாக இருந்தால், தமிழினத்தின் எதிர்காலமும் நன்றாக இருக்கும். என்று உறுதியுடன் கருதுபவன் நான். எனவே ஆவலோடு 'சோதிடமலர்' சஞ்சிகையைப் பிரித்துப் பார்த்தேன்.

அதன்படி, 1982 சனவரி 27ம் திகதிக்கு மேல் திரு. அமிர்தலிங்கத்துக்கு ராகு திசை நடைபெறும்போது அவர் தனது சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய அதிகார பீடமொன்றில் அமர இடமிருக்கிறதென்று "ஜாதக ரீதியாக" திட்டவட்டமாக கூறப்பட்டிருந்தது. அதாவது சுதந்திரத் தமிழ் ஈழத்தின் பிரதமராகவோ ஜனாதிபதியாகவோ தலைவர் அமிர் விளங்கினால்தானே தனது சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கமுடியும்.

ஆக—திரு. அமிர்தலிங்கம் அவர்களுடைய ஜாதகபலனின்படி — 'சோதிடமலர்' வெளியிட்டுள்ள கூற்றின்படி— 1982ம் ஆண்டு தமிழ் ஈழம் மலரவேண்டுமென்பதே இதன் பொருளாகும்,

மந்திரத்தால் மாங்காய் விழாது; சோதிடத்தால் சுதந்திரம் பெறமுடியாது, ஆயினும் சாதிடத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு திரு. அமிர்தலிங்கம் அவர்களின் எதிர்காலம் பற்றிக் கூறப்பட்டிருக்கும் இக் குறிப்பு→ ஒரு நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது அல்லவா? அந்தவகையில் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் சோதிடபலனை ஆராய்ந்து வெளியிட்ட 'சோதிடமலர்' வெளியீட்டாளர்களைப் பாராட்டுகிறோம்.

தமிழினத்தின் ஒரே தலைவனை—தமிழ் சமுதாயம் யாதுகாத்து வரவேண்டும் என்றும் 'சோதிடமலர்' இடித்துரைத்துள்ளது.

'சோதிடமலர்' கிடைக்குமிடம். திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி. விலை ரூபா ஒன்று.

---

தமிழீழப் போராட்டத்தின் நிலை யென்ன? என்ற பேச்சுக்கு மத்தியிலே அமுதண்ணு அவர்கள் தம் 51வது அகவையில் காலடியெடுத்து வைக்கின்ருர்.

கடந்த 25 வருடங்களாக தம் வாழ்வையே ஈழத்தமிழரின் நலனுடன் பின்னிப் பிணைந்தவராக — தியாகத்தின் மொத்த உருவமாகத் திகழும் தன்மைந்தன்தான்-தனது வாரிசாக முடியும்—

# நஞ்சுண்ட கண்டன் எங்கள் அண்ணன்

என்பதனை தன் உள்ளத்தே உறுதியாகக் கொண்டு— மெள்ள— மெள்ள— ஈழத் தமிழர் தம் நெஞ்சங்களிலே வேரூன்றச் செய்து— உங்கள் பலமெல்லாம்—உங்கள் நம்பிக்கையெல்லாம் 'அமுதே' எனச் சொல்லாமல் சொல்லிச் சென்றுவிட்ட நம் தந்தையின் தேற்றம் தான் என்னே? தீர்க்க தரிசனம் தான் என்னே!!

ஆனாலும் எங்கள் அண்ணன் படும் பாடோ சொல்லுந்தரமன்று! தனி நாட்டுக் கோரிக்கையா இதற்கு காரணம் அமுதலிங்கம்! இனக்கலவரமா இதற்குக் காரணம் அமுதலிங்கமே! கட்சிக்குள்ளே உட் பூசலா? காரணம் அமுதலிங்கம் இளைஞர் கட்குள்ளே வேற்றுமையா? காரணம் அமுதலிங்கம்; தமிழீழப் போராட்டம் ஆரம்பிக்கவில்லையா? அதற்கும் காரணம் அமுதலிங்கமே!

இப்படியே ஒவ்வொரு வர்க்கத்தினரும் கக்கிவிடும் நஞ்சினை—தாம் ஏற்று—நஞ்சுண்ட கண்டனாக நம்மையெலாம் ஆளுகின்ருர்! அதனால் இலட்சிய உள்ளங்களில் வாழுகின்ருர்!

முரசறையும் வீரனாக—தானைத் தளபதியாக—தமிழர் தலைவனாக—ஈழத் தமிழரின் கற்பக விருட்சமாக விளங்கும் அமுதண்ணுவிற்கு —தந்தையே! உங்கள் ஆத்ம சக்தியனைத்தையுமளித்து, "அமுதலிங்கம் காலத்திலேயே தமிழீழம் மலரும்" என்ற உங்கள் சொல்வாக்கை — செல்வாக்காக்கிட— ஈழத் தமிழரின் இன்னல் தனைத்துடைத்திட--அண்ணு அவர்கள் பல்லாண்டு—பல்லாண்டு வாழ்ந்திட அருள் செய்குவாய் என வேண்டி நிற்கின்ருேம்!

இவ்வேளை— அண்ணுவிற்கும் ஒரு வேண்டுகோள்!

தமிழீழ விடுதலைக்காக— தங்கள் குடும்பத்தையே தாரை வார்த்து நிற்கும் தாங்கள்— இலட்சோப இலட்சம் இலட்சிய உள்ளங்களின் நம்பிக்கைச் சொத்தாக விளங்கும் தாங்கள்— வளர்ந்திட்ட — வளர்ந்து வரும் இலட்சிய உள்ளங்களின் எழுற்சிமிகு குரலுக்கு செவி சாய்த்து—அவர்களை நெறிப்படுத்தி —காலதேசவர்த்த மன மறிந்து—அவர்கள் குரலுக்கு மதிப்பளியுங்கள்! வெளியே நின்று வெற்றுக் கூச்சல் போடும் பச்சோந்திகளை நாம் அறிவோம்! விலாங்குகளையும் நாம் உணர்வோம்!

தமிழீழத்தின் மூலை முடுக்கெங்கணுமுள்ள இலட்சிய உள்ளங்களை—இயக்கவீரரை அறிந்துள்ள ஒரேஒரு தலைவன் தாங்களே என எண்ணும் வேளை பேருவகை அடைகின்ருேம்;

தலைவனுக்குத் தலைவனாக-தொண்டனுக்குத் தொண்டனாக—விளங்கும் எங்கள் தலைவன் - பன்னெடுங்காலம் வாழ்ந்திட தந்தையைவேண்டும் அதே வேளையில் — எங்கள் இலட்சியம் வெற்றி பெற எங்கள் இலட்சிய இதயமலர்களையே எங்கள் இலட்சியத் தலைவனின் மலர்ப்பாதங்களில் சமர்ப்பிக்கின்ருேம்;

ஊண் உறக்கமற்று—உற்றவர் பெற்றவர்களைப் பிரிந்து பற்றைகளையும் புதர்களையுமே பஞ்சணைகளாக்கி வாழும் எம் அருமை உடன் பிறப்புகளின் கண்ணீர் மலர்களையும் — சிறைச்சாலையையே தம் மறு வீடாகக் கொண்டுவாழும்—அருமைத் தம்பியரின் கண்ணீர் மலர்களையும் இணைத்தே சமர்ப்பிக்கின்ருேம்.

அண்ணு! நாம் வேண்டுவது தமிழீழம! தமிழீழம்! தமிழீழம்!!!

—கலைநிதி தேவா

---

—3-ம் பக்கத் தொடர்

நாடு என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தாரே!

கே; சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் கலாசாரம், நடை உடை பாவனை, மற்றும் பல விடயங்களில் ஒருமைப்பாடு நிலவுவதால், இரு இனமக்களும் ஒரே தேசத்தவராக வாழமுடியும்என்று நீங்கள் நினைக்கவில்லையா?

சிவா! இதற்கு நான் கூறக்கூடிய ஒரே பதில்— 1977 ஆகஸ்ட் கலவர நிகழ்ச்சிகளை மறந்து விடவேண்டாம் என்பதுதான். இந்தக்கலவரத்தின்போது தமிழர்கள் அவர்களது மரபுவழித் தாயகத்தில் கூட பாதுகாப்புடன் இருக்க முடியவில்லை. மலையகப்பிரதேசத்தில் நடந்த பயங்கர நிகழ்வுகள் தமிழ் மக்களின் உள்ளங்களில் இன்னும் பசுமையாகவே காணப்படுகின்றன.

கே: பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காகச் சிங்களத் தலைவர்களுடன் தோளோடு தோள் நின்று சேர். பொன்னம்பலம் அருணுசலம். சேர். பொன்.இராமநாதன், அருணுசலம் மகாதேவா போனேரூர் போராடியிருக்கிருர்கள். வரலாறு இப்படியிருக்க நீங்கள் சந்தேகத் தொனியுடன் பேசுகிறீர்கள் அந்தத் தலைவர்களின் உதாரணத்தை ஏன் பின் பற்றக் கூடாது?

சிவா: அவர்கள் சுதந்திரத்துக்குப் போராடியது உண்மைதான்; பிரச்சினையென்னவென்ருல் அந்த சுதந்திரத்தில் எமக்குரிய பங்கு கிடைக்கவில்லையென்பதுதான். சேர். பொன். அருணுசலம் அவர்களைப்பற்றிப் பேசுபவர்கள், தேசிய காங்கிரசின் நிறுவன உறுப்பினர்களிலொருவரான அவர் அதை விட்டு வெளியேறி "தமிழ் லீக்" என்ற தமிழர் இயக்கத்தை நிறுவியதை மறந்து விடுகிருர்கள். எனவே இதிலிருந்து 1915ம் ஆண்டிலேயே இந்த வேறுபாடு துளிர் விட்டுள்ளதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

கே! கொழும்புத்தமிழர்கள் என்ருவது வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்வதை விரும்புவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

சிவா! அது அவர்களே தீர்மானிக்க வேண்டிய விடயம். ஆனல் ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள். இந்தியா — பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்ட போது பாகிஸ்தானை விட இந்தியாவிலேயே அதிகளவு முஸ்லிம்கள் இருந்தார்கள்.'எம்முடன் யாராவது சிங்கள மக்கள் வாழ விரும்பினல் அவர்களை சமத்துவமுள்ள பிரஜைகளாகவரவேற்போம். அவர்களுக்கு மொழியுரிமை உட்பட சகல உரிமைகளும் வழங்குவோம்.

கே! நீங்கள் கூறுகின்ற பிரிவினைக்கொள்கை காரணமாக நாடே துண்டு துண்டாகி விடும் என்று சர்வதேச நீதிச்சபையும் குறிப்பிட்டுள்ளது. இதைவிட சற்றுக்குறைவான கோரிக்கையின் மூலம் பிரச்சினைகளுக்குத்தீர்வு காண முடியாதா?

சிவா! மற்றப்பக்கம் எவ்வளவு தூரம் எமக்கு விட்டுத்தரத் தயாராக இருக்கிறது என்பதிலேயே எந்தச் சமாதானத் தீர்வும் தங்கியிருக்கிறது. வரலாற்றைப்புரட்டிப்பாருங்கள். பங்களாதேஷ் தனிநாடாக உருவான பின்னர் எஞ்சிய பாகிஸ்தானுக்கு ஏற்பட்டிருக்கும் நிலையை எண்ணிப்பாருங்கள். மற்றநாடுகளில்நடப்பது இங்கும் நடக்கலாம் என்பதை மறந்து விடாதீர்கள், கனடா சமஷ்டி அமைப்புள்ள ஒரு நாடு. ஆங்கிலம், பிரெஞ்சு, ஆகிய இரண்டு மொழிகளும் தேசியத்தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. எனினும் மொன்ட்ரியலில் உள்ள பிரெஞ்சு மக்கள் ஒரு தனி நாட்டுக்காக இன்று போராடுகின்றனர்; பிலிப்பைன்சில் வாழும் முஸ்லிம்களின் நிலையும் இதுதான். அவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திருமதி மார்க்கோஸ் லிபியா ஜனதிபதி கடாபியிடம் சென்று வரவேண்டியிருந்தது. எமது கோரிக்கையில் எந்த வித புதுமையோ அல்லதுபயங்கரமோ கிடையாதென்பது உங்களுக்குப்புரிகிறதா?

கே: இளைஞர் இயக்கம் பற்றி என்ன கூறுகிறீர்கள்? அவர்கள் தீவிரவாதிகளா?

சிவா! எங்கள் இளைஞர்கள் தீவிரவாதிகள் அல்லர் அவர்கள் எமது இலட்சியத்தை ஏற்று; வன்முறையை நிராகரித்திருக்கிருர்கள். ஆனல் வன்முறையை நம்பும் இளைஞர் கூட்டமொன்று இருக்கத்தான் செய்கிறது. அவர்கள் யாரென்பது அரசாங்கத்துக்குத் தெரியாதது போலவே எமக்கும் தெரியாது. கடந்த ஏழு ஆண்டுகளாக நடந்த சம்பவங்களால் எங்கள் இளைஞர்களில் ஒருபிரிவினர்விரக்தியடைந்துள்ளனர் என்பது உண்மைதான். விரக்தியடைந்த இளைஞர்கள் தங்கள் வழியில்தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகிருர்கள். 1971ம் ஆண்டு நீங்கள் இப்படிப்பட்ட இளைஞர்களை தெற்கே கண்டீர்கள். இப்போது வடக்கே காணுகிறீர்கள்.

எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் தலைமைப் பீடத்தின் பாதையை ஏற்றுக் கொண்டுள்ளனர். எமது ஆவரங்கால்மாநாட்டின் போது இடம் பெற்ற இளைஞர் குழப்பம் பற்றிப் பேசுகிறீர்கள். அப்படியான நிகழ்ச்சிகள் எல்லா இயக்கங்களிலும் நடைபெறுகின்றன; இல்லையா? சில இளைஞர்கள் நாம் வேகமாக இயங்கவில்லையென்று கருதுகின்றனர்.

---





மில்க்வைற் நீல சோப்

சம்பூரணசலவைக்கு சிறந்தது

விலை சதம்60 மட்டுமே!

மேலுறைகளை கவனித்து வாங்குங்கள்
—மில்க்வைற்—யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தின் நம்பிக்கைச் சுடர்!



ஈழம் வாழ் தமிழ் இனம் மிக மிக நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. எனினும் தமிழினம் செய்த தவப் பேற்றின் காரணமாக இன்றைய எம் நெருக்கடியான சூழ்நிலைக்கு ஈடு கொடுக்கும் ஒரே தலைவனாக எம் நெஞ்சம் நிறைந்த தலைவனாக— அஞ்சாமையின் திரு உருவமாக அண்ணா அமிர்தலிங்கம் அவர்கள் விளங்குகிறார்கள்.

எம் இயக்கத்தலைவர்களைப் பற்றி அடிக்கடி தந்தை செல்வாவுடன் நான் உரையாடிய போதெல்லாம் திரு. அமிர்தலிங்கம் மீது தனக்கிருக்கும் பற்றினையும், பாசத்தினையும், ஏன் நம்பிக்கையையும் கூட அவர் எடுத்துரைக்க என்றும் தயங்கியதில்லை. எனக்குப் பின் தமிழினத்தை வழி நடத்தக்கூடிய ஒரே தலைவன் அமிர்தலிங்கம் தான் என்று தனக்கேயுரிய புன்முறுவலுடன் கூறிய கருததுக்கள் எம் செவிகளில் என்றும் ஒலித்தபடியேஇருக்கின்றன. திரு. அமிர்தலிங்கம் அவர்களின் தமிழ்ச் சொல்லாட்சி ஆங்கிலச் சொல் வன்மை, சட்ட நுணுக்கத்துடன் வாதிடும் தன்மை, சிந்தனைத் தெளிவு, செயற்றிறன், தனிப்பட்டவாழ்விலும் பொதுவாழ்விலும் கடைட்பிடிக்கும் ஒழுக்கநெறி இவை அனைத்திற்குமேலாக நெருக்கடியான காலகட்டத்திற்கு ஈடு கொடுக்கும் முறையில் அவர் காட்டிவரும் துணிவு, தந்தை செல்வாவைக் கவர்ந்த பண்புகளாக விளங்கின. குறிப்பாக திரு. அமிர்தலிங்கத்தின் துணிகரமான பல செயல்களை எமக்குக் கூறுவதில் தனி இன்பம் கண்டவராகத் தந்தைவிளங்கினார். அமிர்தலிங்கம் என்றால் துணிவு, துணிவு என்றால் அமிர்தலிங்கம் என்றுதந்தை செல்வா தன் பொக்குவாய்ச் சிரிப்புடன் அடிக்கடி கூறிய கூற்றுக்களை இன்று நினைத்தால் கூட உள்ளம் உருகி மெய் சிலிர்க்கின்ற தன்மையை நான் பெறுகின்றேன்.

## நம்பிக்கை ஒளி

1952ஆம் ஆண்டுதொடங்கி பள்ளி மாணவனாக இருந்த காலகட்டத்திலேயே இவரின் வளர்ச்சியினைக் கூர்ந்து கவனித்து வந்தவன் நான். எம் இயக்கத்தில்அடிமட்டத் தொண்டனாக விளங்கி படிப்படியாகத் தன் பணியினாலும் தன்னை அர்ப்பணிக்கும் இயல்பினாலும் ஒரு தலைவனுக்குரிய பண்புகளை வளர்த்துக் கொண்டு இன்று ஈழம் வாழ் தமிழ் இனத்தின் ஒரே தலைவனாக— நம்பிக்கை ஒளியாக விளங்குகிறார். தொடக்கத்தில் அவரது கவர்ச்சியான தோற்றமும் பேச்சாற்றலுமே என்னைக் கவர்ந்த பண்புகளாக விளங்கின. 1956 இன் பின்பு அவருடன் நெருங்கிப்பழகிய போது மேற்குறித்த பண்புகளுக்கு மேலாகத்தான் கொண்ட கொள்கைக்காக முழு நேர அடிப்படையில் உழைக்கவும் தன்னை முற்றாக அர்ப்பணிக்கவும் ஆயத்தமாக இருக்கிறார் என்பதனை நான் நன்குணர்ந்தேன்.

ஈழம் வாழ் தமிழ் அரசியலைப் பொறுத்தவரையில் என் உள்ளம் கவர்ந்த தலைவர்களாக தந்தை செல்வாவும் எமக்கு வாழ்வளித்த வன்னியசிங்கம் அவர்களும் என் நினைவலைகளில் மோதுகின்றனர். இவர்கள் வரிசையில் என்நெஞ்சம் நிறைந்த தலைவராக அண்ணா அமிர்தலிங்கம் அவர்களும விளங்குகிறார். மேற்குறிதத தலைவர்களின் பண்புகள்பலவற்றின் உறைவிடமாக விளங்கும் அண்ணா அமிர்தலிங்கம் அவர்கள் மேற்குறித்த தலைவர் போல் தனிப்பட்ட ஒழுக்க நெறியிலும் பொது ஒழுக்க நெறியிலும் மிக உயர்ந்து விளங்குகிறார்.

## ஒழுக்கத்தின் இருப்பிடம்

ஒரு தலைவனிடம் எல்லாச் சிறப்பியல்பும் இருந்தும் ஒழுக்கம் குன்றி ஒழுகுவானாயின அவன் தன்னை அழித்துக் கொள்வது மட்டுமலல தான் சார்ந்த இயக்கத்துக்கும் அழிவைத் தேடுகினற ஆபத்து ஏற்படுகின்றது. அண்ணா அமிர்தலிங்கம் அவர்கள் மாற்றாரும் மதித்துப் போற்றும் அளவுக்கு ஒரு உயாநத தலைவனாக விளங்குவதறகு அடிபபடைக் காரணம் அவர் கடைப்பிடிக்கும் ஒழுக்க நெறியே ஆகும். ஒழுககம் உயிரிலும் உயர்நததாய் ஓம்பபபடும் என வள்ளுவன் கூறிய கூற்றுக்கு இலக்கியமாக விளங்குபவர் நம் அமிர்தலிங்கம் அவர்கள்.

மது, மாது, பதவி, பட்டம், பணம் போன்றவற்றால் எவன் விலைக்கு வாங்கப்பட முடியாதவனாக இருக்கிறானோ அவனே ஒரு ஆபத்தான எதிரி என ஒரு ஆஙகில அரசியல்வாதி கூறிய கூற்று எம் நினைவுக்கு வருகிறது. காந்தி அடிகள், அறிஞர் அண்ணா, தந்தை செலவா, வாழ்வளித்த வன்னியசிங்கம் ஆகியோர் விலைக்கு வாங்க முடியாத தலைவர்களாக விளங்கினர். அந்த வரிசையில் அண்ணா அமிர்தலிங்கம் அவர்களும விலைக்கு வாங்க முடியாத தலைவனாக விளங்குவதனால் எம் விலை மதிததற்கரிய செல்வமாக நாம் அவரைப் போற்றுகின்றோம்.

சாக்கிரஸ்தீசுக்கு ஒரு அரிஸ்ரோற்றல் போல், அண்ணல் காந்திக்கு ஒரு நேரு போல், பெரியார் ஈ.வே.ராவுக்கு ஒரு அண்ணா போல் தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்டு எமக்கு அளிக்கப்பட்ட அருட்கொடையாக, இனிய அமுதமாக அண்ணா அமிர்தலிங்கம் விளங்குகிறார்.

## இரு குறைகள்

அமிர்தலிங்கம் அவர்களிடம் பல சிறப்பியல்புகள் குடிகொண்டுள்ளதெனினும் ஒரு சில குறைகளும் உண்டென்பது எனது கருத்தாகும். அப்படி எதுவித குறைகளும் அற்றவராக இருப்பின் அவர் தெய்வமாக அல்லவோ கணிக்கப்படுவர். அப்படிக் கணிக்கப்படுவதை அவர் கூட விரும்பார் என்பது எனக்குத் தெரியும். மனிதர்களாகப் பிறந்தவரில் தெய்வீக இயல்புகள் இருக்கலாமேயன்றி அவன் தெய்வமாக இருக்க முடியாது. ஆகவே அமிர்தலிங்கம் அவர்கள் அடிப்படையில் மனிதனாக இருபபது அவருக்கும் சிறப்பு எமக்கும் நலலதாகும். மனிதனிடம் எழும் பிரச்சனைகளுககு மனிதனே தீாவு காண்பது நலம். தெய்வம் துணை நிற்க முடியுமெனில் நிற்கட்டும்.

திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் இரண்டு குறைகளைக் காண்கின்றேன். ஒன்று தன்னைப் போல மற்றவாகளும் நல்லவர் என்று நம்பி சில வேளைகளில் ஏமாந்து விடுவது. அடிப்படையில கயவர்கள மனம் மாறுவார்கள்

**ஈழவேந்தன்**

என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. "Man doesn't fundamentally change" எனும ஆங்கிலக கூற்றில் எனக்குஏதோ நம்பிக்கையுண்டு. திருதத முடியாத சில கயவாகளை எண்ணும் போது இந்த நம்பிக்கை மேலும் வலுப்பெறுகிறது. ஆகவேதான அண்ணா அமிாதலிங்கம் எல்லோரையும் நமபாது ஆனால் எல்லோரும் நம்புமமுறையில் வாழவேண்டும் என்பது எம்விருப்பமாகும். "நம்ப நட ஆனால் நம்பி நடவாதே" என்று தந்தை செல்வா அடிக்கடி கூறும கூற்றுக்கள் எம செவிகளில் என்றும் ஒலிதத படியே இருக்கின்றன.

## அண்ணாவிடம் ஒரு வேண்டுகோள்

அடுத்து அண்ணா அமிர்தலிங்கம் அவர்களிடம் யான் காணும் மற்றைய குறை அவரின் முற்கோபமாகும். இதைப் பலர் குறையாகக் கூறுவதை யான் கேட்டுள்ளேன். யானும் இவரின் முற்கோபத்திற்கு அடிக்கடி ஆளாகியுள்ளேன், ஆறுவது சினம் என்ற ஒளவையின் கூற்றை இவர் தன் நெஞ்சில் ஏற்றின் எல்லோருக்கும நல்லதாய் அமையும். எனினும் எம் அண்ணாவின் கோபம் வைத்துச் சாதிக்கும் கோபம் அல்ல. அது எங்கிருந்து வந்தது என்று சொல்ல முடியாத முறையில் தோன்றிய அதே வேளையில் அது மறைந்து விடும். ஆகவே தான் அவர் கோபிககாது மனம் விட்டுப் பேசும் நிலை தானே உருவாகிவிடுகிறது.

அண்ணா அமிர்தலிங்கம் நல்லவராய் வல்லவராய் விளங்கிய போதும், நல்லவராயோ வல்லவராயோ விளங்காதவர்களுக்கும் இயக்கத்தின் கட்டுக்கோப்பை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற ஆவலால் இனத்தின் நிலைதத நல்வாழ்வுற்காக உழைக்க முடியாதவர்களுக்கும் உழைக்க விரும்பாதவர்களுககும் பரிந்து பேசும் குற்றவியல் வழக்குரைஞராய் மாறி தனக்கும் சில வேளையில் அவப்பெயரைத் தேடிக்கொள்கிறார். பாவிகளுக்காகப் பரிந்து பேசப்போய் தன் பெயரை என் அண்ணா கெடுக்கக் கூடாது என்பது அவரின் அருமைத் தம்பியாகிய நான் உரிமையுடன் விடுக்கும் வேண்டுகோளாகும்.

## கடவுள் தந்தபரிசு

இன்று அண்ணா அமிருக்கு அகவை ஐம்பதி ஒன்றுகிறது, அவரின் அகவை முதார்ச்சி பெறுகிறது. அவரின் அரசியற் சிந்தனையிலும் முதிர்ச்சி முகிழ்ந்தருப்பதினைக்காணக்கூடியதாக இருக்கின்றது. தமிழ் இனததின் விடுதலைக்காக தன்னையே முற்றாக அர்ப்பணித்து முழு நேர ஊழியனாக செயலாற்றும் இச்செயலாளர் நாயகம் சிறிலங்காவின் இத்தேசியப் பேரவைகாலம் முடிவுறும் முன்பேயேதமிழ் இனத்தின் அடிமை வாழ்வு முடிவுற—தமிழ் இனம் தன்விடிவினைக்காண — ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று துள்ளிக் குதித்து இன்பப் பெருவெள்ளத்தில் மூழ்க தமிழ் மண் காத்து தாயகம் மீட்க இனி அங்குலமும் அயல் வெறியர் ஆளவிடமாட்டோம், பூத்த தடா தமிழ் ஈழம் புலாநத தடா தமிழன் வாழ்வு என்று எம் அரசவைக் கவிஞன் காசி ஆனந்தன் கண்ட கனவை நனவாக்க அண்ணா அமிர்தலிங்கம் எம்மை விடுதலைப்போரில் வழி நடத்திச் செல்வது அவரின் தலையாய கடமையாகும். கடவுள்மீது நம்பிக்கை வைத்துள்ள தமிழ் இனம் காலத்தின் தேவையை நிறைவு செய்ய கடவுளாற் தந்த "பரிசாக" விளங்கும் எம் அண்ணா அமிர்தலிங்கம் எம் நம்பிக்கை ஒளியாக என்றும் ஒளிவிடுவது உறுதி என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

# புதுவழி காட்டு

பார் போற்றும் பைந்தமிழை இந்த நாட்டில்
படிப்படியாய் அழித்தொழிக்க முனைந்து நின்ற
சீரழிந்த சிங்களத்தை எதிர்த்தே அன்று
சிங்கேறாய் புறப்பட்டார் தளபதி இங்கே!
மார்பகத்தில் குண்டுபட்டு மடிந்திட்டாலும்
மறத்தமிழர் தனிநாடு காண்போம் என்று
போர் முழக்கம் செய்துவரும் தலைவா— உந்தன்
புதுவழியைக் காட்டிடுவாய் பிறந்த நாளில்!

ஃ

தந்தை எங்கள் செல்வாவின் அணியில் சேர்ந்து
தமிழரசுப் படையினிலே தலைவனுமாகி
முந்தி நின்று தமிழ் ஈழம் முழுதும் சென்று
மூட்டிவிட்டாய் விடுதலைக் கனலை இங்கே!
சொந்த மண்ணில் தனி நாடு காணுமட்டும்
தூங்காது தமிழ்ச்சாதி இனிமேல் என்று
சிந்தனையில் இலட்சியமே கருத்தாய் கொண்டு
செயற்படு நம் தலைவா! நீ வாழ்க! வாழ்க!

—பொன்கை சிவபாலன்

# எங்கள் மீட்டர்!

—முருகு— திருக்கேதீஸ்வரம்—

கண்ணெனத் தமிழ் இனத்தை
தன்னுயிர் தந்து காக்கும்
எண்ணரும் கொள்கைக் காக
பன்னரும் இன்ன லேற்றும்
திண்ணிய நெஞ்சத் தோடும்
புன்னகை வதனத் தோடும்
மண்ணில் நற் பணிக ளாற்றும்
அமிர்தமே நீடு வாழ்க!

ஃ

அன்னையெம் தமிழைக் காக்கும்
அருந் தமிழ்த் தொண்டனாகி
பின்னையெம் தமிழ் இனத்தின்
பெருந் திறற் தலைவனாகி
முன்னையெம் தமிழ் இனத்தோர்
தோற்ற எம் தாயகத்தின்
பொன்னை நேர் தமிழ் ஈழத்தின்
மீட்பரே அமிரே வாழ்க!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் பெயர் 'யாப்பபட்டுவ'வாம்!

## திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வரலாற்றுத் திரிப்பு!

தமிழர்களின் தலைநகரமாக விளங்கும் யாழ்ப்பாணப் பட்டினத்தின் பெயர் என்ன தெரியுமா? 'யாப்ப பட்டுவ' என்று யாழ்ப்பாணத்துக்கு புதிய சிங்களப் பெயர் சூட்டியுள்ளது திரைப்படக் கூட்டுத்தாபனம்.

தனித்தமிழ் தலைநகரமும், தமிழர் ஆட்சி நடத்தியதுமான யாழ்ப்பாண மாநகரத்தின் பெயரை "யாழ்ப்பாணம்" என்று குறிப்பிடாமல் சிங்களத்தில் 'யாப்ப பட்டுவ" என்று குறிப்பிட்டுள்ளது திரைப்படக்கூட்டுதாபனம்.

யாழ்ப்பாணத்திலுள்ள சாந்தி திரைப்பட மாளிகையில் திரைப்பட விழாவொன்றை ஒழுங்கு செய்துள்ள திரைப்படக் கூட்டுத்தாபனம், அதுபற்றிய சுவரொட்டி விளம்பரங்களை யாழ்ப்பாண நகரெங்கும் ஒட்டியுள்ளது. இந்த விளம்பரச் சுவரொட்டிகளில் சிங்கள மொழியில் "யாழ்ப்பாணம்" என்று தமிழ்ப் பெயரைக் குறிப்பிடாமல் "யாப்ப பட்டுவ" என்று குறிப்பிட்டுள்ளது.

தமிழர்களுடைய பிரதேசம் எதுவும் கிடையாதென்றும், தமிழர்களுக்குத் தனிராச்சியம் எதுவும் இருக்கவில்லையென்றும் யாழ்ப்பாணத்தில்கூடசிங்களவரே இருந்ததாகவும் அண்மையில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரசாரம் செய்யப் புறப்பட்டதும், புத்தபிக்குகளும் இதே கருத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்வதும் தெரிந்ததே;

தூய தமிழ் நாடாகிய யாழ்ப்பாணமும் முன்பு தனிச் சிங்கள நாடாக இருந்ததே என்ற தமது வரலாற்றுத் திரிப்புக்கு ஆதாரம் தேடுமுகமாக யாழ்ப்பாணம் இப்போது 'யாப்ப பட்டுவ' ஆக்கப்பட்டிருக்கிறது; இந்தத் திரிப்பு வேலையை திரைப்படக் கூட்டுத்தாபனம் செய்துள்ளது.

---

### சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50-00

அரை ஆண்டு ,, ரூ. 25-00

விபரங்களுக்கு!
15, மகாத்மா காந்தி வீதி
யாழ்ப்பாணம்.

---

### இளைஞர் குரல்

இரண்டாவது இதழ் வெளிவருகிறது.
* புதிய கருத்துகள்
* புரட்சிச் சிதறல்கள்.

காலத்தின் தேவையாக—
கனிந்து வருகிறது.
சோரம் போகாதே
என்று
நேரம் பார்த்துக் கூற
வெளிவருகிறது.
இம்மாதம்
இருபத்தாறும் திகதி
எங்கும் கிடைக்கும்
**இளைஞர்குரல்**
பக்கங்கள் எட்டு,
விலை சதம் 60

---

### கிங்ஸ்லி (கொழும்பு)

2-வது வாரம்

சிவாஜி கணேசன், ஜமுனா
— நடித்த —
**பொம்மைக் கல்யாணம்**

### விஜயா (மட்டுநகர்)

6-வது வாரம்

சிவாஜி நடித்த—
**உத்தமன்**
— கலர் —

### கெப்பிட்டல்

**பால நாகம்மா**

### பிளாஸா

- எம். ஜி. ஆர். நடித்த -
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய கொப்பி)

### லிடோ (யாழ்நகர்)

2-வது வாரம்

**தீர்க்க சுமங்கலி**
(புதிய பிரதி)

### செல்லமகால்

3-வது வாரம்

எம். ஜி. ஆர், சரோஜாதேவி,
மனோகர், ஜெயலலிதா,
நம்பியார் நடித்த-
**அரசகட்டளை**
(புத்தம் புதிய கொப்பி)

### கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
- நடித்த -
**தாய்க்குத் தலைமகன்**

### றீகல் மட்டுநகர்

4-வது வாரம்

**பெரும் புகழும்**

---

இப்பத்திரிகை கொழும்பு -12, 194 ஏ, பண்டாரநாயக்க [illegible] லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஆகஸ்ட் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது. அச்சுப்பதிப்பு: [illegible]ஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org